# உலக மொழிகளில் உள்ள நீதிநூல்களுடன் திருக்குறள் ஓர் ஒப்பீடு

*முனைவர் டீ. மல்லிகாதேவி*
இணைப்பேராசிரியர் (ஒய்வு), தமிழ்த்துறை
ஜே.கே.கே.நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குமாரபாளையம்

மலர்: 4
இதழ்: 2
மாதம்: அக்டோபர்
வருடம்: 2019
ISSN: 2454-3993

**முன்னுரை**

ஒரு நாட்டின் இலக்கிய வளர்ச்சி அந்நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியாகவே கருதப்படுகிறது. எந்த நாட்டு வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் அந்நாட்டு மக்களின் சிந்தனை வளர்ச்சி அங்கு தோன்றிய இலக்கியங்களில் வெளிபட்டிருப்பதைக் காணலாம். அதற்கேற்பவே அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைமுறையும் அமைந்தது. முதலில் கண்மூடித்தனமாகப்பின் பற்றப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள் ஒழுங்கபட்டு நன்மை எது? தீமை எது? என ஆராயமுற்பட்டபொழுது தான் உலக நாடுகளின் ஒழுக்கவியல் நூல்கள் தோன்றத் தொடங்கின. பண்டைத் தமிழகத்திலும் ஐந்திணை ஒழுக்கங்ளை மேற்கொண்டு போரிலும் காதலிலுமே ஈடுபட்டிருந்த மக்களிடம் ஆங்காங்கு ஒழுக்க சிந்தனைகள் தோன்றியிருந்தன. எனினும் தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்குங்கால் நீதி நூல்கள் சங்கம் மருவிய காலத்திற்குப் பின்பே பெருமளவில் தோன்றத் தொடங்கிருப்பதை உணரமுடிகிறது.

பண்டைத் தமிழ்ச்சான்றோர் நீதி என்னும் சொல்லுக்கீடாக அறம் என்ற சொல்லையே கையாண்டுள்ளனர்.

சொற்களும் வடமொழியில் தருமம் என்ற சொல்லும் அறம் எனும் தமிழ்ச் சொல்லுக்குப் பொருந்துவதாக உள்ளது. உலகமொழிகள் பலவற்றிலும் உயர்ந்த அறக்கருத்துக்களை போதிக்கும் நூல்கள் தோன்றி வளர்ந்துள்ளமையை அவ்வந்நாடுகளின் இலக்கிய வரலாறுகள் உணர்த்துகின்றன.

**உலகவரலாற்றில் நீதிநூல்களின் தோற்றம்**

இன்புறுத்துவதையே நோக்கமாக்கொண்ட இலக்கியங்களில் அறக்கருத்துக்கள் இலைமறைக் காய்போலவே கூறப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் இன்புறுத்துவதை விடுத்து அறிவுறுத்து வதை நோக்கமாகக்கொண்ட நீதிநூல்கள் வளர்சியடையத் தொடங்கின.

ஒழுக்கவியலைப் பற்றி நாம் அறியும் நூல்கள் எகிப்தில் தோன்றியவை என்கிறார் தனிநாயக அடிகள்.

**தம்மபதம்**

இந்தியாவில் தோன்றிய சமயங்களுள் ஒன்று பௌத்தம். சித்தார்த்தர் எனும் புத்தர் தம்சீடர்களுக்கு உபதேசித்த உபதேசங்கள் பாலிமொழியில் அமைந்தன. இது கி.மு 70-இல் இயற்றப்பட்டதாக கருதப்படுகிறது. வடமொழியில் காணப்படும் மனுதர்ம சாஸ்திரமே மிகப்பழமையான நீதிநூல் எனும் கருத்து உண்டு.

**பத்ருஹரி**

கி.பி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பத்ருஹரி நீதிசதகம், வைராக்கிய சதகம், சிருங்கார சதகம், எனும் மூன்று நூல்களை எழுதியுள்ளார். மிகச் செறிவான நீதிக் கருத்துகளை இந்நூல்கள் விரித்துரைக்கின்றன.

**கிரேக்க இலக்கியங்கள்**

ஹோமரின் இலியட் ஒடிசி என்ற இரு காப்பியங்களும் ஹீசியட் என்பாரின் வேலையும் நாட்களும் (Works & days) எனும் நூலும் தியோஜனி (Theohony) எனும் நூலும் சிறந்த நீதி நூல்களாகக் கருதத்தக்கவை. ஹீசியட் டுக்குப்பின் தோன்றிய நூல்கள் சிறப்பு மிக்கவையல்ல என்றே கருதப்படுகிறது.

**உரோமானிய இலக்கியங்கள்**

ரோமானிய இலக்கியங்கள் பலவும் பெரிதும் கிரேக்கருடைய இலக்கிய மரபுகளை ஒத்தவை. லுக்கிரிஷஸ் எனும் புலவர் அகஸ்தஸின் ஆட்சிக்காலத்தில் தோன்றினார்.

வர்ஜீல் எழுதிய ஜார்ஜிகஸ் கி.மு ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. காப்பியப் புலவரான வர்ஜிலின் ஏணியத் (Vcneid) உலகப்புகழ் பெற்ற நூலாகும்.

**சீனமொழி இலக்கியங்கள்**

உலகின் பழமையான மொழிகளில் சீன மொழியும் ஒன்று. இம்மொழியில் இன்புறுத்தும் இலக்கியங்கள், அறிவுறுத்தும் இலக்கியங்கள் என்ற இருவகைப்பாட்டை காண முடிகிறது.

கன் பூசியஸ், மென்சியஸ், லாவோட்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் சீன மொழியில் கவிதைகள் பலவற்றைப் படைத்தனர். கன்பூசியஸ் (கி.மு 551-478) எழுதிய இலக்கியங்கள் செம்மொழி இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

**தமிழ்மொழியில் நீதி இலக்கியங்கள்**

தமிழர்கள்பன்னெடுங்காலமாகவேநீதியைப் போற்றி வந்துள்ளனர். டாக்டர் கால்டுவெல் தமிழ் மக்களை அறவர் எனப்போற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அறம் மலிந்த கொள்ளையினர் என்பதே இதன்பொருள்.

சங்கநூல்களில் முதுமொழி, வாயுறை, வாழ்த்து, செவியறிவுறு என்ற துறைகள் நீதிக்கருத்துக்களையே புலப்படுத்துவன.

புறநானூறு, பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் நூல்கள், சமணசமயத் தொடர்பான நீதி நூல்களில் சில, ஔவையாரின் மூதுரையும் உலக நீதி நன்னெறு, அறநெறிச் சாரம், நறுந்தொகை, குமரகுருபரர் நீதிநெறி விளக்கமும் நீதிநூல் வகையைச் சார்ந்தவை.

**திருக்குறள்**

தமிழில் எத்தனை நீதிநூல்கள் தோன்றிடினும் ஈடும் எடுப்பும் மிக்க தனிப்பெரும் நூலாகக் கருதப்படுவது திருக்குறளே. உலக வரலாற்றில் இடம்பெறும் நீதி நூலாசிரியர்களோடு ஒப்பிடும்பொழுது திருவள்ளுவருக்கு ஈடானவர் எவருமில்லை.

**உலக நீதிநூல்களுடன் திருக்குறள்-ஓர் ஒப்பீடு**

இளமையில் தந்தையாலும் பருவ காலத்தில் கணவனாலும் முதுமையில் மைந்தராலும் காக்கப்பட வேண்டியவள் பெண் என்கிறது மனுதர்மம் (மனு 9,3)

கிரேக்க கவிஞர், சைமோனைட்ஸ் (simonides) பெண் என்பவள் நாய், நிலம், கடல், கழுதை, மரநாய் குரங்கு, தேனி ஆகியவற்றிலிருந்து படைக்கப்பட்டவள் எனக் கேலிச்சித்திரம் தீட்டியுள்ளார்.

கிரேக்க நாட்டுப்பாடல்களின் தொகுதி ஒன்று நிலத்திலிருந்து படைக்கபட்ட பெண் உணர்ச்சியற்றவள், நல்லது எது தீமை எது என்பது கூட அவளுக்குத் தெரியாது. அந்தளவு அறியாமைமிக்கவளாக அவள் இருக்கிறாள் (பக்-27) என்கிறது.

தமிழகத்தில் தோன்றிய வள்ளுவரோ, பெண்ணின் பெருந்தக்கயாவுள (குறள் 54) பெண்ணே பெருமை உடைத்து (குறள் 207) பெண்ணின் பெருந்தக்கது இல் குறள் (1137) என்கிறார். பெண்ணை வாழ்க்கைத் துணை நலம் என்று அவர் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

பிரம்மாவின் முகத்திலிருந்து வெளிப்பட்டமையாலும், வேதங்களைக் கற்றிருப்பதாலும் அந்தணன் சிறந்தவன் (மனு -1,93) என்கிறது மனுதர்ம சாஸ்திரம் ஆனால் வள்ளுவரோ,

**அந்தணர் என்போர் அறவோர் மற்றெல்வுயிர்க்கும்**
**செந்தண்மை புண்டொழுக லான் (குறள்-30)**

என்கிறார். தம்மபதமும் எவனிடம் சத்தியமும், தர்மமும் நிலைத்துள்ளதோ அவனே பிராமணன் என்கிறது. (தம்மபதம் -392)

உலக நன்மையை முன்னிட்டே நடைபெறுவன வேள்கள் அது செய்யப்படும்போது பசுவதையாகாது (மனு-5.39) என்கிறது மனு சாஸ்திரம்.

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர் செகுத்து உண்ணாமை நன்று**
**(குறன் -259)**

என்கிறது குறள்

ஹோரசியட் எனும் கிரேக்க அறிஞர் தம் வேலையும் நாட்களும் நூலில் பழிக்கும்பழி, வாங்குவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார் மன்னிக்கும் பண்பை அவரிடத்துக் காண முடியவில்லை

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து**
**அறனல்ல செய்யாமை நன்று (குறள்-157)**

என்கிறார் வள்ளுவர்

அமைச்சர்களாகத் தக்கவர் பற்றி மனு சாஸ்திரம் பாட்டன் நாள்முதல் மந்திரித்தனம் செய்த வம்சத்தவர்களாயும், வேதசாஸ்திரம் பயின்றவர்களாயும் இருக்க வேண்டுமென்கிறது.

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல் (குறள் -517)**

என்கிறது குறள்

**முடிவுரை**

இதுவரை கண்ட ஒப்பீடுகளின் பயனாக உலகச் செம்மொழிகளில் உள்ள நீதி இலக்கியங்களுக்கு திருக்குறள் ஒன்றே சிறப்ப மிக்கதாகத் திகழ்வதைக் கண்டோம். வடிவாலும் உணர்த்தப்படும் கருத்துக்களாலும், எடுத்தியம்பும் முறையாலும் திருக்குறள் ஒப்புயர்வற்ற நீதிநூலாகும்.

**உதவிய நூல்கள்**

1. திருக்குறள், பரிமேலழகர் உரை- சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி -9-ம் பதிப்பு, 1953.
2. இராசா கி, இலக்கிய வகைமையியல் ஒப்பாய்வு, பார்த்திபன் பதிப்பகம் சென்னை, 1984.
3. தனிநாயகம், திருவள்ளுவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர், 1967.
4. திரிலோக சீதாராம், மனுதர்ம சாஸ்திரம் - அறிமுகம், ஏ.கே கோபாலன் பப்ளிஷர்ஸ், சென்னை, 1961.
5. திருநாவுக்கரசு, க.த, திருக்குறள் நீதி இலக்கியம் சென்னை பல்கலைக்கழகம் சென்னை,1977.
6. மாணிக்கம், வ.சுப, வள்ளுவம் பாரி நிலையம், சென்னை, 1982.
7. Calduvell R.A Compartive grammer of Dravidian Languages University of Madras, Madras -1959
8. Universal Encyclopedia – Lexican Publication New-work -1985